# ஜனாதிபதிககு அமிர் அனுப்பிய அவசரக்கடிதம்

பக்கங்கள் 6 விலே சதம் 40

ஈழநாடு

The EELA NADU

Registered as a Newspaper at the Generꞁl PostOffice Sri Lanka under No QB/8945/78

மலர்: 20 மார்கழி 28 ஸபர் 12 இதழ்: 328

யாழ்ப்பாணம் வெள்ளிக்கிழமை 12-1-79

SRI LANKA CAMPUS LIBRARY PERIODICALS DIVISION

மிகவும் கவர்ச்சி மிக்கது

பல்க்கன் ஸ்கூட்டர்கள்

இப்பொழுது காட்சியறையில் உங்களுக்கு விருப்பமான கலர்களைத் தெரிவுசெய்யுங்கள்.

பல்க்கன் ஏஜன்ஸி, ஐந்து சந்தி, யாழ்ப்பாணம்.

போன்: 685. (1309)

(கொழும்பு)

மீண்டும் ஒரு இனக்கலவரத்துக்கான ஏற்பாடுகள் சில பொறுப்புவாய்ந்த பகுதிகளிலிருந்து செயல்படுவதாகத் தமக்கு நம்பிக்கையான இடங்களிலிருந்து தகவல் கிடைத்திருப்பதாகவும் இதுபற்றி முன்னெச்சரிக்கையாக நடவடிக்கை எடுப்பது நாட்டின் அமைதிக்கும் மக்களின் பாதுகாப்புக்கும் அவசியமென்று தாம் கருதுவதாகவும் எதிர்க்கட்சித் தலைவரும் தமிழர் விடுதலைக் கூட்டணிச் செயலாளர் நாயகமுமான திரு. அ. அமிர்தலிங்கம் ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜயவர்த்தனவுக்கு அனுப்பிவைத்துள்ள ஒரு கடி

(6-ம் பக்கம் பார்க்க)

# விவசாயத்துக்கு மாத்திரம் கடன் வழங்க ஒரு வங்கி

## அமைச்சர் ஈ.எல்.சேனநாயகா வகுத்துள்ள திட்டம்

(கொழும்பு)

விவசாயத்துக்காகமாத்திரம் கடன் வழங்கக்கூடியதான ஒரு புதிய வங்கியை ஏற்படுத்துவதற்கு விவசாய அபிவிருத்தித்துறை அமைச்சர் திரு. ஈ. எல். சேனநாயக்க உத்தேசித்துவருகிறார்.

அமைச்சரின் இத்திட்டத்திற்கு அரசின் அனுமதி கிடைத்தவுடன் விவசாயிகளுக்கு கடன வழங்குவது ஆரம்பமாகும்.

பயிர்ச் செய்கைக் காரியங்களுக்குமாத்திரமே இக்கடன் வழங்கப்படும். உப உணவு பயிரிடவும் விவசாயிகள் இக்கடன்களைப் பெற்றுக்கொள்ளலாம்

தமது காணிகளை அடமானமாக வைத்து இப்புதிய வங்கியில் கடன் பெற முடியும். அத்துடன் தமது உற்பத்திப் பொருட்களை நெல் சந்தைப்படுத்தும் திணைக்களத்திடம் விற்பதற்கும் விவசாயிகள் ஒப்புக்கொள்ளவேண்டும்.

காலேயரைக்கால் ஏக்கர் காணியுடைய விவசாயிகளும் கூட இவ்வறிய வங்கியில்கடன் பெற வசதிசெய்து கொடுக்கப்படும்.

### அறிவித்தல்

தைப்பொங்கல் பண்டிகையை முன்னிட்டு 14-1-79 ஞாயிற்றுக்கிழமை 'ஈழநாடு' அலுலகத்துக்கு விடுமுறையாதலால் 15-1-79 திங்கட்கிழமை மட்டும் 'ஈழநாடு' வெளிவர மாட்டாது.

-நிர்வாகி

## ராஜ்மோகன் காந்தி நாளை மறுதினம் யாழ்.வருகிறார்

[யாழ்ப்பாணம்]

மகாத்மா காந்தி, இராஜகோபாலாச்சாரியார் ஆகிய பெரியோர்களின் பேரனும், 'ஹிம்மத்' ஆங்கிலச் சஞ்சிகையின் ஆசிரியரும், இந்திய அறவாழ்வுக்கழக அமைப்பாளருமான திரு. ராஜ்மோகன் காந்தி தம்பதி நாளைமறுதினம் பொங்கல் தினத்தன்று யாழ்ப்பாணம் வருகிறார்கள். இவர்களுடன் அமெரிக்கா, ஆஸ்திரேலியா, நோர்வே, சுவீடன், மலேசியா, இந்தியா ஆகிய நாடுகளைச் சேர்ந்த பன்னிரண்டு பிரமுகர்களும், ஐந்து சிங்கள நண்பர்களும் வருவார்கள்.

திரு. ராஜ்மோகன் குழுவை 14ந் திகதி காலை, யாழ்ப்பாணப் புகையிரதநிலையத்தில் தந்தை செல்வா அறங்காவல் குழுவினரும், கூட்டணி எம். பி.க்களும் வரவேற்பர்.

அன்று காலை, இக்குழுவினர் யாழ்நகரின் இல்லங்களில் நடைபெறும் பொங்கல்விழாக்களில் கலந்துகொள்வர். 11 மணிக்குத் தந்தை செல்வா நினைவாலயத்திற்குச் சென்று அஞ்சலிசெலுத்துவர். மாலை 4 மணிக்குச் சாவகச்சேரி எம். பி. திரு. வ. ந. நவரத்தினத்தின் இல்லத்தில் நடைபெறும் தேநீர் விருந்தில் கலந்துகொள்வர். மாலை 6 மணிக்குச் சாவகச்சேரியில் நடைபெறும் உழவர் விழாவில் கலந்துகொண்டு சிறப்புச் சொற்பொழிவாற்றுவர்.

15ந் திகதி காலை, யாழ்நகரிலுள்ள பாடசாலைகளுக்கு விஜயஞ்செய்து மாணவர்களுடன் உரையாடுவர். மாலை 6 மணிக்கு யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறும் விசேட சிறப்புக் கூட்டத்தில் உரையாற்றுவர்.

16த் திகதி மாலை, யாழ்ப்பாண வர்த்தகர்களால் ஒழுங்குசெய்யப்பட்ட தேநீர்விருந்தில் கலந்துகொள்வர். 17ந் திகதி இக்குழுவினர் கொழும்பு செல்வார்கள். (கெ

## கிழுழைப்புபட்டதாரிகள் விடுக்கும் கோரிக்கை

[யாழ்ப்பாணம்]

கிழுழைப்புத் தமிழ்ப் பட்டதாரிகளுக்கு உடனடி நிவாரணமாக, அரசு மூன்று வருடாந்தச் சம்பள உயர்வை அல்லது 150 ரூபா மேலதிகக் கொடுப்பனவை வழங்கவேண்டும் எனக் கோரும் முக்கிய தீர்மானத்தைப் புதிதாக நிறுவப்படவிருக்கும் கிழுழைப்புத் தமிழ்ப் பட்டதாரிகள் சங்கத்தின் முதலாவது கூட்டத்தில் அமைப்புச் செயலானர் திரு. செ. மெற்ருஸ்மயில் சமர்ப்பித்து நிறைவேற்றவிருக்கிறார்

மேற்படி சங்கம், பொங்கல் தினமான ஞாயிற்றுக்கிழமை மாலை 2 மணிக்கு, நல்லூர் சாதனை தமிழ்க் கலவன் பாடசாலை மண்டபத்தில் அங்குரார்ப்பணஞ்செய்துவைக்கப் படவுள்ளது.

வேறு பல தீர்மானங்களும் நிறைவேற்றப்படவிருக்கின்றன. (கெ)

## துணைவியாகச் சென்றபெண் தாலிச்சங்கிலியுடன் மறைவு!

### துணைவியில் வைத்து கைது!

(கொக்குவில்)

யாழ். பஸ்நிலையத்தில் ஒரு பெண்ணுடன் ஏற்பட்ட அறிமுகத்தைத் தொடர்ந்து, துணைவியாக சென்று பல உதவிகளைச் செய்தபெண் ஒருவர் தந்திரமாக சுமார் 4600 ரூபா பெறுமதியான நகையை வாங்கி தலைமறைவாகினாள்.

பொலிசார் அப்பெண்ணை துணைவியில் வைத்து கைது செய்ததுடன் உருக்கிய நிலையில் நகையையும் மீட்டுள்ளனர்.

மானிப்பாய் வீதியைச் சேர்ந்வ எம். எம். ஜெசிமா (30 வய்து) என்ற பெண் பொலிசில் செய்த புகாரைத் தொடர்ந்து பொலிசார் திடீர் வேட்டையில் இறங்கி சில மணிநேரத்தில் அந்தப் பெண்ணை வட்டுக்கோட்டையில் உள்ள துணைவி என்ற கிராமத்தில் வைத்து கைது செய்தனர்

யாழ். குற்றத்தடுப்பு பிரிவு பொறுப்பதிகாரி திரு பீரிஸ் ஜெயவர்த்தன மற்றும் மாணிக்கவாசகர், விஜயசிங்கா, திஸநாயக்கா ஆகியோர் துணைவிக்குச் சென்று சந்தேகநபரான மகேந்திரம் மனோகரியை (31 வயது) கைது செய்தனர்.

கச்சேரிக்குச் செல்வதற்காக ஜெசிமா, யாழ் பஸ் நிலையத்தில் காத்துநின்றபோது மனோகரி அருகில் வந்து நட்புக்கொண்டதாகவும் பின்னர் இருவரும் கச்சேரிக்குச் சென்றபோது தனக்கு துணைவியாக வந்து பல உதவிகள் செய்ததாகவும் பின்னர் அங்கிருந்து இருவரும் வங்கிக்கு வந்ததாகவும். ஜெசிமா புகாரில் தெரிவி

[6-ம் பக்கம் பார்க்க]

## கொழும்பு நகரப் பகுதிபோல் யாழ்.நகரப் பகுதியும் வெவ்வேருகப் பிரிக்கப்படும்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மாநகரசபை எல்லைக்குட்பட்ட பகுதி கொழும்புநகரம் போன்று வெவ்வேறு பகுதிகளாக பிரிக்கப்படவிருக்கிறது.

இதற்கென நாடு நகர நிர்மாண பகுதியைச் சேர்ந்த உத்தியோகத்தர் ஒருவர் யாழ்ப்பாணம் வந்துள்ளார்

யாழ்ப்பாண நகரத்தின் பல்வேறு பகுதிகளையும் அவர் சுற்றிப்பார்த்தார்.

நகரம், குடியிருப்பு பகுதி, கைத்தொழில் பகுதி, வியாபாரப்பகுதி, எனப் பிரிக்கப் படவிருக்கிறது.

குடியிருப்பு பகுதிகளில் சில கைத்தொழில் நிலையங்களும், வியாபார நிலையங்களும் அமைக்கப்படுவதால மக்கள் பெரும் கஷ்டத்திற்குள்ளாகி வருவதாகவும் இப்பகுதிகள் தனித்தனியாக அமைவதால் பெரும் நன்மையுண்டு என்றும் சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர் ஒருவர் தெரிவித்தார். (க)

## வார்ட்டிலிருந்த 5வயதுச் சிறுமியைக்காணவில்லை!

(யாழ்ப்பாணம்)

பாழ்ப்பாணம் பெரிய ஆஸ்பத்திரி சிறுவர் வாட்டில் அனுமதிக்கப்பட்ட 5 வயது சிறுமி ஒருவர் திடீரென காணமற்போய் விட்டதால் ஆஸ்பத்திரியில் பெரும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது!

கொக்குவில் தாவடிதெற்கை சேர்ந்த எஸ். நாராயணசாமி என்பவர் இச்சிறுமியை

[6-ம் பக்கம் பார்க்க]

## வரி விளம்பரம்

### தேவை

தேவன்ஸ் சியாக்காய் பவுடர் பைக்கற் செய்வதற்கு பெண் பிள்ளைகள் தேவை. தேவாஸ் கிறைண்டிங் மில், 67, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 1300

---

பட்டணசபை, சுன்னாகம்

### சகல மின் பாவனையாளர்களுக்கும் ஓர் அறிவித்தல்

சுன்னாகம் பட்டணசபையில் மின்சாரம் பெறும் சகல மின் பாவனையாளர்களுக்கும் இத்தால் அறிவிப்பதாவது, இலங்கை மின்சார சபை எங்களுக்கு வழங்கும் மின்சக்திக்கு 1-12-78-ஆம் திகதி தொடக்கம் கட்டணங்களை அதிகரித்துள்ளது ஆகவே 1-12-78 ஆம் திகதி தொடக்கம் நாங்கள் வழங்கும் மின்சாரத்திற்குரிய கட்டணங்களை அதிகரிப்பதற்கு நிர்ப்பந்திக்கப் பட்டுள்ளோம் எனவே 1-12-78 தொடக்கம் அமுலுக்கு வரும் கட்டண விகிதங்கள் கூடிய விரைவில் பாவனையாளர்கள் அனைவருக்கும் அறிவிக்கப்படும்.

விசேட ஆணையாளர்,
பட்டணசபை,
சுன்னாகம்.

பட்டணசபை அலுவலகம்,
சுன்னாகம்.
05-01-79. 1297

---

கரைச்சி வடக்கு
ப. நோ. கூ. சங்கம்,
பரந்தன்

### பதவி வெற்றிடங்கள்

கீழ்க்காணும் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் யாவும் 22-1-79ந் திகதிக்கு முன்னர், பொதுமுகாமையாளர், கரைச்சி வடக்கு ப. நோ. கூ. சங்கம், பரந்தன் என்ற முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைக்கப்படல் வேண்டும்,

1. கிளை முகாமையாளர் தரம் II (அரிசி ஆலை)
தராதரம் : க. பொ. த. (சாதாரண) பத்திரம்.
3 வருட அனுபவமும்
அல்லது
ஜே. எஸ். சி. தராதரப் பத்திரமும், 5 வருட அனுபவமும்.
வயது : 23 — 40
சம்பளம் : நாளொன்றுக்கு 15/- (எல்லாப் படிகளுமுட்பட)

2. அரிசி ஆலை இயந்திரம் இயக்குபவர்
தராதரம் : ஜே. எஸ். சி. தராதரமும் 5 வருட அனுபவமும்.
வயது : 23 — 40
சம்பளம் : நாளொன்றுக்கு ரூபா 13/- (எல்லாப் படிகளுமுட்பட)

பொதுமுகாமையாளர்
கரைச்சி வடக்கு
ப. நோ. கூ. சங்கம்,
பரந்தன்.
திகதி : 8-1-79. 1289

---

### பயிற்சி

மொன்ரிசோரி - ஆசிரியர் பயிற்சி டிப்புளோமா புதிய முறைகளைக் கற்ற விசால ஆசிரியர்களால் நடாத்தப்படும். G. C. E. [O/L] சித்தியடைந்த மாணவிகளுக்கு மட்டும் 15-1-79க்கு முன் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. வகுப்புக்கள் ஆரம்பம் 20-1-79. அதிபர், 73, உயர் கலைக்கல்லூரி, ஆனைப்பந்தி. யாழ்ப்பாணம். 1283

---

வெல்டிங் (Electric Arc & Gas) இலெக்றிக் வயறிங், ரேடியோ (Transistor), Auto Electrcians Certificate, Diploma in Building Technology முதலிய பயிற்சிகள், வெளிநாட்டு முறையில் நடாத்தப்படும். ஆங்கிலமும் மூதலுதவிப் பயிற்சியும் இலவசம். நாஷனல் இன்ஸ்ரிரியூட்ஸ், 57, பாங்சோல் வீதி, யாழ்ப்பாணம். 1279

---

3 மாத விசேட மின்னியல் டிப்பிளோமா பயிற்சி 12-01-1979 ஆரம்பமாகவுள்ளது. விபரங்கட்கு: இன்ஸ்ரிரியூட் ஒவ் என்ஜினியரிங் ரெக்னொலொஜி, 11 B, மொம் சாக்கட்டிடம், ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 1281

---

வெளிநாடுகளில் வேலை கொள்ள ஏற்றது. வெல்டிங் (ELECTRIC & GAS) பயிற்சி விசேட பொறியியலாளர்களால் வெளிநாட்டு முறையில் பயிற்சிகள் மூன்றுமாத காலத்திற்கு அளிக்கப்படுகின்றன ஆங்கிலமும் இலவசமாகக் கற்பிக்கப்படுகின்றன, (வித்தியா பகுதியினரால் அங்கீகரிக்கப்பட்ட கல்வி நிறுவனம்.) அதிபர், 73, உயர்கலைக் கல்லூரி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். 1282

---

### வாடகைக்கு

பொற்பதி ரோட் கோண்டாவில் கிழக்கில இருக்கும் 6 அறைகள் கொண்ட விசாலமான வீடும், வளவும் வாடகைக்கு கொடுக்கப்படவிருக்கிறது. தேவையானோர் சட்டத்தரணி த. சண்முகராசா [கோண்டாவில்] மூலம் தொடர்பு கொள்ளவும். 1295

---

### விற்பனைக்கு

வெளிநாட்டிலிருந்து தருவிக்கப்பட்ட 'Morris Minor 1000' கார் விற்பனைக்குண்டு E. A மரியாம்பிள்ளை, 129, மெயின் வீதி, யாழ்ப்பாணம் என்ற விலாசத்தில்பார்வையிடலாம். 1296

---

நாஷனல் பனசோனிக் (National Panasonic) 2 இன் 1 Compact R.S. 4300 F.D.S பிந்திய மாடல் இரண்டு ஸ்பீக்கர்களுடன் விற்பனைக்குண்டு தொடர்பு கொள்ளவும். அரசாங்க நில அளவையாளர், 46, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். 1288

---

இங்கிலாந்தில் இருந்து தருவிக்கப்பட்ட 8 ஸ்ரீ மொறிஸ் ஒக்ஸ்போர்ட் கார் விற்பனைக்குண்டு வெள்ளி, சனி நாட்களில் பார்வையிடலாம், இரத்தினராஜா, இந்துக் கல்லூரி ஒழுங்கை, மானிப்பாய். 1301

---

### பின்னுறுதிக்கட்டளை பற்றிய அறிவித்தல்

யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றில்

காலஞ்சென்ற மொகமட் ஆலி மாரைக்கார் மொகமட் சுல்தான் என்பவரது மரணசாதனத்தின் மரணச் சொத்தின் விடயத்தில்

மரணமெய்தியவர்
மொகமட் சுல்தான் கமீட் ஆலி, 23ஏ, சித்திரா ஒழுங்கை, கொழும்பு 5.
மனுதாரர்

மரணசாதன நியாயாதிக்கம் இல. ரி/3412

மேலேயுள்ள இலக்கங் கொண்ட மரணசாதன வழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்துபோனவரின் மரணசாதனத்தை எண்பிப்பதற்காக நிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு, அதில் அதற்கிணங்கப் பின்னுறுதிக் கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரும் 1979-ம் ஆண்டு மாசி மாதம் 2-ம் நாளன்று முற்பகல் 9 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றுனதாக்கப்படலாகாதென்பதற்குக் காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றார்.

1978 ஆண்டு ஐப்பசி மாதம் 20-ந் திகதி.

நீதிமன்றக்கட்டளைப்படி
ஒப்பம்
பொ. பாக்கியநாதன்
பதிவாளர்.

வரைதல்:
செ. மகேசன்,
மனுதாரின் சட்டத்தரணி
1293

---

### பின்னுறுதிக்கட்டளை பற்றிய அறிவித்தல்

யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றில்

காலஞ்சென்ற அருமைநாயகம் இராஜரத்தினம் என்பவரின் மரணசாதனமில்லாச் சொத்தின் விடயத்தில்

மரணமெய்தியவர்

மரணசாதன நியாயாதிக்கம் இல. ரி/3417

டாக்டர் ஏ. விஜயரத்தினம், 278, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.

மனுதாரர்

மேலே உள்ள இலக்கம் கொண்ட மரணச்சொத்து நியாயாதிக்க வழக்கு மேலே பெயர் கொண்ட குறிப்பிட்ட இறந்துபோனவரின் மரணச்சொத்தை நிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்க பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரும் 1979-ம் ஆண்டு மாசி மாதம் 2-ந் திகதி முற்பகல் 9 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றுனதாக்கப்படலாகாது என்பதற்கு காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றனர்.

1978-ம் ஆண்டு கார்த்திகை மாதம் 10-ந் திகதி.

நீதிமன்றக் கட்டளைப்படி
ஒப்பம்
பொ. பாக்கியநாதன்,
பதிவாளர்.

வரைதல்:
ஒப்பம்
செ. மகேசன்,
மனுதாரின் சட்டத்தரணி.
1292

---

### WANTED

Engineers or Experienced Technicians to invest and manage on commission basis

(1) MOTOR VEHICLES WORKSHOP.

(2) FARM VEHICLES WORKSHOP.

Only persons capable of recruiting and Managing Technicians and labour should apply for terms to Autos Ltd., Jaffna. 1298

---

### பின்னுறுதிக்கட்டளை பற்றிய அறிவித்தல்

யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றத்தில்

காலஞ்சென்ற வைத்திலிங்கம் நடராஜா என்பவரின் மரணசாதனமில்லா மரணச் சொத்தின் விடயத்தில்

மரணமெய்தியவர்
வைத்திலிங்கம் நடராஜா
கைம்பெண் ஞானதிருதேவி, கோப்பாய் ரோட்டு, உரும்பராய் கிழக்கு.
மனுதாரர்.

மரணசாதன நியாயாதிக்கம் T/3422

எதிராக

1. நடராஜா அருணன், (பராயமற்றவர்)
2. நடராஜா அம்புஜன் இருவரும் கோப்பாய் ரோட்டு உரும்பராய் கிழக்கு. (பராயமற்றவர்)
3. வைத்திலிங்கம் நவரத்தினம், சங்கரப்பிள்ளை ரோட்டு, மானிப்பாய்.

எதிர்வாதிகள்.

மேலேயுள்ள இலக்கம் கொண்ட மரணச்சொத்து வழக்கு மேலேபெயர் கொண்ட குறிப்பிட்ட இறந்துபோனவரின் மரணச்சொத்தை நிர்வகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்திற் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்க பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரும் 1979ம் ஆண்டு மாசி மாதம் பதினைந் திகதி முற்பகல் 9 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றுனதாக்கப்படலாகாதென்பதற்குக் காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றனர்.

1978ம் ஆண்டு கார்த்திகை மாதம் 27ந் திகதி

பொ. பாக்கியநாதன்,
(ஒப்பம்)
நீதிமன்ற கட்டளைப்படி,
பதிவாளர்.

வரைதல்:
செ. மகேசன்
(ஒப்பம்)
மனுதாரின் சட்டத்தரணி.
1294

---

### தேசிய தின விழா பிரதம அதிதி தேசாய்

(கொழும்பு)

பெப்ரவரிமாதம் 4ம் திகதி கண்டியில் நடைபெறவிருக்கும் இலங்கை தேசிய தின விழாவில் பாரதப் பிரதமர் திரு. மொரார்ஜிதேசாய் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். திரு. தேசாய் பாராளுமன்றத்திலும் உரையாற்றவிருக்கிறார். (உ)

---

### பரு. டிப்போ துக்கம்

(புலோலி)

வடபிரதேச போக்குவரத்துச்சபை நிர்வாக உத்தியோகத்தரான எஸ் பாலசுப்பிரமணியம் மரணமானதையடுத்து பருத்தித்துறை இ. போ. ச பஸ்களில் வெள்ளைக் கொடிகள் பறக்கவிடப்பட்டிருந்தன. பருத்தித்துறை இ. போ. ச டிப்போவிலும் வெள்ளைக் கொடிகளும், கறுப்புக்கொடிகளும் பறக்கவிடப்பட்டு துக்கம் அனுஷ்டிக்கப்பட்டது.

திரு. பாலசுப்பிரமணியத்தின் மறைவுக்கு அஞ்சலி செலுத்துமுகமாக பருத்தித்துறை டிப்போ ஊழியர்கள் இரங்கல்துண்டுப்பிரசுரமொன்றையும் அச்சிட்டு விநியோகித்திருந்தனர். (உ)

---

### நிவாரணப் பணியில் திருப்தி

[அரியாலை]

கொழும்பு அங்கிலிக்கன் திருச்சபை ஆயர் அருட்பெருந்திரு சுவிதின் பெர்னாண்டோ அடிகள் மட்டக்களப்புப் பகுதிக்கு விஜயம் செய்து சூறாவளியினால் பாதிக்கப்பட்ட பகுதிகளை நேரில் பார்வையிட்டு கொழும்பு திரும்பினார்.

சூறாவளியினால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் மேற்கொள்ளப்படும் நிவாரணப் பணிகள் குறித்து அவர் திருப்தி தெரிவித்தார். [உ]

---

### பாராட்டு

[அரியாலை]

விற்பனை அபிவிருத்தித் திணைக்கள தேசிய பொது சேவைச் சங்கத்தின் வேண்டுகோளை ஏற்று மேற்படி திணைக்களத்தின் வடபிராந்தியக் கிளையின் நிர்வாகமனைத்தும் தமிழ் மொழியில் நடைபெறுவதையிட்டு தொழிற்சங்கத்தலைவர் திரு செ. சிறில் சங்கத்தின் சார்பில் தமது பாராட்டுக்களை வடமாகாண விற்பனை அபிவிருத்தித் திணைக்கள உதவி ஆணையாளர் திரு. கந்தசாமிக்கும் பிராந்தியக் கணக்காளர் திரு. ரி. யோனுக்கும் கடிதமூலம் தெரிவித்துள்ளார். [உ]

---

பருத்தித்துறை நகரசபை

## கேள்விப்பத்திர அறிவித்தல் 1979

பருத்தித்துறை நகரசபையின் 1979ம் ஆண்டுக்கான கீழ் குறிப்பிடப்படும் குத்தகைக்கு 1979ம் ஆண்டு ஜனவரி மாதம் 26ந் திகதி முற்பகல் 10-00 மணிவரையும் பருத்தித்துறை நகரவிசேட ஆணையாளரால் கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

கேள்விப்பத்திரங்கள் கீழ்க்குறிப்பிடும் பிணைப்பணமும் பத்திரப்பணமும் 25-01-79 முற்பகல் 11-30 மணிவரை செலுத்தி பெற்றுக்கொள்ளலாம் பத்திரப்பணம் மீளளிக்கப்படமாட்டாது. மேலதிக விபரங்களை இவ்வலுவலகத்தில் அறிந்துகொள்ளலாம்.

| | பிணைப்பணம் | பத்திரப்பணம் |
|---|---|---|
| மாட்டிறைச்சிக் கடை இல. 2 | 150-00 | 10-00 |

அன்ரன் அல்பிரட்
விசேட ஆணையாளர்,
பருத்தித்துறை நகரம்.

விசேட ஆணையாளர் அலுவலகம்,
பருத்தித்துறை, 10-01-79. 1299

---


## ALLIANCE FRANCAISE DE JAFFNA

(The world - wide organisation for the study of French Language & Culture)

AUDIO — VISUAL CLASSES IN FRENCH.

To Commence Soon

130, 1st Cross Street — Jaffna.

1268 Tele: 7782.

# திரிவேணி சங்கமத்தில் உலக இந்து மகாநாடு

**ஜனவரி 25, 16, 27 ஆகிய திகதிகளில் இந்தியாவில் கங்கை, யமுனை, சரஸ்வதி நதிகள் சங்கமமாகும் திரிவேணியில் (பிரயாகையில்) 'விஸ்வ இந்து பரிஷத்' என்ற ஸ்தாபனத்தின் ஆதரவில் உலக இந்து மகாநாடு ஒன்று நடைபெறவிருக்கின்றது. உலகெங்கிலுமிருந்து பல்லாயிரக்கணக்கானபிரதிநிதிகளும், பார்வையாளர்களும் இந்த மகாநாட்டில் கலந்து கொள்ள விருக்கிறார்கள், இலங்கையிலிருந்தும் பிரதிநிதிகள் வருவார்கள் என்று மகாநாடு ஏற்பாட்டாளர்கள் எதிர்பார்க்கிறார்கள்.**

உலகெங்கிலும் உள்ள இந்துக்களிடையே ஒற்றுமையுணர்வும், விழிப்புணர்வும் ஏற்படும் வகையில் இயங்கி வரும் அகில உலக இயக்கம் 'விஸ்வ இந்து பரிஷத்' இந்துக்கள் தங்கள் பாகுபாடுகளை மறந்து புத்துணர்ச்சியுடன் ஒன்றுபட்டு செயல்படவேண்டிய தருணமிது.

இமயம் முதல் குமரிவரையிலான அகண்ட பாரதத்தில் சாதி, மத, இன மொழிக் கிளைகள் பலப்பலஇருந்தாலும் 'இந்து' என்ற ஒரே அடிமரத்தையே அவையனைத்தும் ஆதாரமாகக் கொண்டுள்ளன.

'இலை'களைப் பறித்தும், சில வேளைகளில் 'கிளை'களை முறித்தும் இடைபடியாக நமது மத விருட்சத்திற்கு காலங்காலமாக எத்தனையோ ஊறுகள் ஏற்பட்டுவந்தன இன்றும் ஏற்பட்டுவருகின்றன. ஆனால் 'வேர்'களையே தண்டிக்கத் துணியும் அராஜக தடைமுறைகளைக் கண்டபின்னும் 'யாருக்கோ வந்தது' என்ற அலட்சிய மனோபாவத்தைக் கடைப்பிடிடபோமாகில் நமது வருங்காலம் வெறும் ஏட்டுச்சரிதமாகிவிடும்!

சமயச் சிந்தனைகளையும், தன்மானப் பெருமைகளையும் வெற்றுப்பேச்சுக்களால் மட்டும் அடைந்துவிடமுடியாது' வேதங்களையும், இதிகாசங்களையும் பனப்பாடம்செய்து, மண்டபங்களிலும், கோயில்களிலும் சுதியோடு பாடிவிடுவதால் மட்டும் மதத்தை வளர்த்தவர்கள் ஆகிவிடமாட்டோம்.

உலக நாடுகளில் நிறைந்துள்ள அறுபது கோடிக்கும் மேற்பட்ட இந்துக்களனைவரும் எண்ணத்தால், செயலால் பின்னிப்பிணைந்து பெருவாழ்வு காண்பதற்கு உரியவழிகளைத் தேர்ந்தெடுக்கவேண்டிய சரியான நெருக்கடி நேரம் இது!

## நா. குமரகுருபரன்

(விஸ்வ இந்து பரிஷத் பிரதிநிதி)

பக்தி வழியென்றால் சக்திகளையெல்லாம் கைவிட்டு... வெறும் நடைப்பிணங்களாக வாழவேண்டுமென்று இந்து மதத்துக்கான எந்தப் புராணமும் கூறவில்லை சமயச்சண்டையும், சாதிப்பூசல்களும் இன்னும் முழுமையாக நம்மை விட்டுப்போகவில்லை,

முதல் பிரசாதம் உனக்கா, எனக்கா' என்றொரு வழக்கு! யானைக்கு நாமத்தை இப்படிப் போடுவதா, அப்படிப் போடுவதா என்றொரு வாக்குவாதம் இப்படியெல்லாம் நமது சக்தியை, உணர்ச்சியை வீணாக்குவது சட்டப்படி குற்றமில்லை யென்றாலும், தர்மப்படி மகா பாவமாகும்!

ஊர்கூடித் தேரிழுத்து, ஒருவருக்கு ஒருவர் உதவிசெய்து, பார்போற்ற வாழ்ந்த இனம, இன்று கூறுபோடப்பட்ட காய்கறிகளைப்போல வேறுவேறுகப்பிரிந்து, சீரழிந்து போவதைத் தடுப்பதற்கென்று உருவான அகில உலக அளவிலான ஸ்தாபனம்தான் விஸ்வ இந்து பரிஷத் இதன் பொது ஜன சேவை இன்றுபாரதமெங்கிலும் விரிவடைந்துவருகின்றது.

சத்திய நெறியும், சரியான வழியும் காட்டிய—காட்டும் உத்தமத் தலைவர்களின் இணையோடும், ஒப்பற்ற தியாகத் தொண்டர்களின் தன்னலங் கருதா உழைப்போடும் இயங்கி வரும் விஸ்வ இந்து பரிஷத்தில் உறுப்பினராக இருப்பதைப் பெருமை எனக்கருதும் எண்ணம் ஒவ்வொரு இந்துவிறகும் வந்தே தீரவேண்டும்.

சாதி பேதமற்ற ஓர் உன்னதமான இந்து சமுதாயத்தை உலகில் உருவாக்குவதே எமது இலட்சியம்.

பாரதியப்பண்பாட்டுக் கேந்திரமாக இயங்கிவரும் பரிஷத்தின் தலைவர்களும், தொண்டர்களும், அனுதாபிகளும் ஒன்று சேர்ந்து கருத்துப் பரிமாற்றப் பெறுவதற்கும், செயல்முறைகளை வகுடபதற்கும் அகில உலக அளவிலான மாநாடு ஒன்று கூடுகிறது.

1979ம் ஆண்டு ஜனவரி மாதம், திரிவேணி சங்கமமான பிரயாகையில்கூடும் அந்த மகாநாட்டில் அவசியம் கலந்து கொள்ளவேண்டுமென இந்துக்கள் அனைவரையும் உரிமையோடு வேண்டுகிறோம்

தெய்வபக்தியும், மக்கள் நலனும், சமயஉணர்வும் சன்மார்க்க நெறியும் உள்ள ஒவ்வொருவரும் தவறாமல் கலந்து கொள்ளவேண்டிய மாநாடு இது.

அதேநேரத்தில் இலங்கையிலும் பரிஷத்தின் கிளையொன்றை ஆரம்பிப்பதற்கு முயற்சி எடுக்கப்பட்டுவருகின்றது அதற்கு முதற்படியாக யாழ்ப்பாணத்தில் இம்மாதம் திரு யோகேந்திரா துரைசாமி அவர்களின் தலைமையில் ஒரு செயற்குழுக்கூட்டம் நடைபெறவுள்ளது.

'ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு—நம்மில் ஒற்றுமை நீங்கில் அனைவர்க்கும் தாழ்வு' என்ற மகாகவியின் மந்திர உபதேசமே நமது இதய கீதமாக விளங்கட்டும்.

# பக்திஇலக்கியஎழுச்சியும் சம்பந்தர் தமிழ்ப்பற்றும்

பல்லவர்காலத்தெழுந்த பக்தி இலக்கியமாகிய தெய்வீகத் திருமுறைகளின் தோற்றம் தமிழ் இலக்கிய வரலாற்றில் ஓர் குறிப்பிடத்தக்க மாற்றததைத் தோற்றுவித்ததென்று கூறலாம். இக்காலத்தே சைவ நாயன்மார்களும் ஆழ்வார்களும் தோன்றியிராவிடின் சைவத்தையும் வைணவத்தையும் சமண பௌத்த மதங்கள் நிலைதளரச் செய்திருக்கும். பக்தி இலக்கியங்கள் பெரும்தொகையாக பல்லவர் காலத்தில் எழுந்தது போல வேறு எக்காலப் பிரிவிலும் எழவில்லை எனலாம். பக்தி இலக்கிய வளம் தமிழுக்குரிய பெரும் சிறப்பாகக் கருதப்படுகின்றது. இத்துணைப் பெருந்தொகையாக அது வேறு இலக்கிய வளமுள்ள எந்த மொழியிலாயிலும் எழவில்லை என்பது அறிஞர் முடிபாகும்.

### பல்லவர் காலம்

மேலும் இக்காலத்தேதான் சிற்பம், ஓவியம், இசை, நடனம் முதலிய நுண்கலைகள் மிக உயர்ந்த நிலைபெற்றிருந்தனவென்பது அவர் குடைந்தெடுத்த கோயில்களிலிருந்தும், அக்கால சிலாசாசனங்களிலிருந்தும் அறியக்கிடக்கின்றது. அத்தோடல்லாமலும் பல்லவர் காலத்துப் பெருங்கோயில்களில் நடன மண்டபம், தருக்கமண்டபங்கள் அமைக்கப்பட்டிருந்தவற்றால் அக்கோயில்கள் சமயக்கல்வி சாத்திரக்கல்வி இசைநடனம் முதலியவற்றை வளர்த்தற்குரிய இடங்களாகவும் விளங்கி வந்தனவென்றும் ஆராய்ச்சியாளர்கூறுவர்.

பல்லவர்காலத்தில் பெருவழக்காயிருந்தது பதிகமென்றே கூறலாம். சங்ககாலத்திலும், சங்கமருவிய காலத்திலும் வாழ்ந்த சான்றோர்கள் தாம் பெற்ற தெய்வானுபவங்களை வெளிப்படுத்தவதற்குப் பெருந்தேவபாணி, சிறுதேவபாணி, பரிபாடல் முதலிய செய்யுள் வகைகளைக் கையாண்டனர். நாயன்மார்களும் ஆழ்வார்களும் அச்செய்யுள்வகைகளைக் கைவிட்டு வளமுள்ள பதிக வடிவத்திலே தம்முடைய பக்தியனுபவங்களை வெளிப்படுத்த முன் வந்தமை தமிழிலுள்ள செய்யுளிலக்கிய வளர்ச்சியில் குறிப்பிடத்தக்க தொன்றாகும்.

### ஆழ்வார் வரிசை

கி. பி. ஆறும் நூற்றாண்டிற்கும் கி. பி. ஒன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் ஆரம்பித்த சோழராட்சிக் காலப் பகுதிக்கும். இடைப்பட்ட காலப் பகுதியே பல்லவர்காலப் பகுதியென அழைக்கப்பெறும். இக்காலத்தே வாழ்ந்தோரில் நாயன்மார் வரிசையில் சம்பந்தர், அப்பர், சுந்தரர், சேரமான்பெருமான், மாணிக்கவாசகர், திருமூலர் முதலியோரும் ஆழ்வார் வரிசையில் முதலாழ்வார் மூவரையும் தவிர திருமங்கையாழ்வார், பெரியாழ்வார், கோதையார், தொண்டரடிப் பொடியாழ்வார், குலசேகராழ்வார், திருமங்கையாழ்வார், திருப்பாணாழ்வார்,

### வெள்ளிவிருந்து

நம்மாழ்வார், மதுரகவியாழ்வார் ஆகிய ஒன்பதின்மரும் குறிப்பிடத்தக்கவராவர் மேலும் பல்லவர் காலத்தே எழுந்த பக்தி இலக்கிய தோற்றத்தின் வளர்ச்சி சோழர் காலத்திலேதான் சிறப்புற்று விளங்கியது எனவும் கூறலாம்.

### சம்பந்தரும் தமிழ்ப்பற்றும்

முத்தமிழ் விரகராக விளங்கும் முதற்குரவர் திருஞானசம்பந்தர் தமிழ்ஞானசம்பந்தன் என நாற்பத்தைந்து இடங்களில் தம்மைத்தாமே விதந்து கூறியிருத்தல் தெய்வத்தமிழ் மீது சம்பந்தருக்கிருந்த காதலை நன்கு புலப்படுத்துகின்றது எனலாம் இங்ஙனம் தமது பெயரைத் தமிழோடு இயைத்துப்புணர்த்திக் கூறிக்கொண்டு மகிழ்ந்த இச்சிறப்பு நம் தமிழ்ஞான சம்பந்தருக்கே உரிய தனிச் சிறப்பாகவும் விளங்குதல் காணலாம். தமிழ்மொழிக்கே இன்றுவரை ஒரு கலங்கரை விளக்கம்போல இன்றும் நின்று நிலவிவரும் இலக்கண நூலாகிய தொல்காப்பிய ஆசிரியரும், ஒப்புயர்வற்ற நீதிநூலாகிய திருக்குறளை அருளிச்செய்த திருவள்ளுவரும் வேறு பல சான்றோர்கள் எவரும் தம் பெயரை தமிழோடு புணர்த்தித் தமது நூலில் குறிப்பிடவில்லை. இதிலிருந்து சம்பந்தரின் தமிழ்ப்பற்று தெள்ளிதில் விளங்கும்.

பண்ணிசைக் கலாநிதி
எஸ். கே. சிவபாலன்

இன்றைய உலகில் நம்அருந் தமிழ் மொழியின் மீது அன்பும் ஆர்வமும் இல்லாதவர் பலரைக் காண்கின்றோம். இவர்கள் வேற்று மொழிகளிடத்து மயக்கமுற்று வாழ்கின்றனர். சம்பந்தர் பெருமான் இவர்களுக்கெல்லாம் ஒரு கலங்கரை விளக்கமாகத் திகழ்கின்றார் அதுவும் 1,300 ஆண்டுகளுக்கு முன்பே திகழ்ந்தார். ஆனால் இன்றைய தமிழ் மக்கள் நிலை என்ன?

உணர்ந்து சிந்திப்பார்களா? தமிழ் ஞான சம்பந்தன் என்னும் தொடரில் தமிழ் எனும் சொல் ஞானசம்பந்தர்க்கு முன்னும் பின்னும் அவரைப் போல ஞானசம்பந்தம் பெற்று விளங்கியவர்கள் வேறு பிறர் எவரும் இலராதலின் பிறிதின் இயைபு நீக்க வந்தது அன்று! ஞானசம்பந்தரின் பண்பு இத்தகையது என விளக்குதற்காக இயைபின்மை நீக்கவே வந்தது. எனவே தமிழ்ப் பண்பாடுகள் பலவற்றிற்கும் நிலைக்களனாக விளங்கு வரும் சம்பந்தப் பெருமானே யாவார்.

### தமிழே சிவம்

தமிழும் சிவனும் ஒன்றினொன்று வேறு பிரிக்க முடியாதவை. தமிழே சிவம். சிவமே தமிழ். சிவம் வாழ்ந்தாலன்றி தமிழ் வளர்ந்து பயனில்லை. தமிழ் வளர்ந்தாலன்றிச் சிவம் வாழ்தல் இயலாது என்னும் உண்மையை மனித சமுதாயம் உணர்தல் வேண்டும். இது கருதியே சிவஞான சம்பந்தராகிய சம்பந்தர் தம்மை தமிழ் ஞான சம்பந்தர் எனக் குறிப்பிட்டார் இதிலிருந்து சிவநெறித் தமிழின் சிறப்பு நன்கு புலனின்றது. எனவே ஞான சம்பந்தரை நினைத்தால் தமிழும், தமிழை நினைத்தால் ஞான சம்பந்தரும் நினைவிற்கு வருதல் வேண்டும். நம்பியாரூரரும் 'நாளும் இன்னிசையால்தமிழ் பரப்பும் ஞானசம்பந்தன்'' 'நற்றமிழ் வல்ல ஞான சம்பந்தன்' எனத் தமிழோடு இணைத்தே சம்பந்தரைப் புகழ்வதும் நோக்கி இன்புறப்பாலதாகும்.

### தமிழிற் புதுக் கவிதை

ஞானசம்பந்தர் ஒப்புயர்வற்ற பெரும் கவிஞராகவும் விளங்கக் காணலாம். அவ

(5-ம் பக்கம் பார்க்க)

## அப்பாவை அகத்துளனே அறிகுவோமே!

--- அரியாலையூர் வே. ஐயாத்துரை ---

எம்பாவாய்! என்றுளத்தை எழுப்பு கின்ற
இதப்பாக்க ளிருபதிலே இணைந்த இன்பம்
நம்பாவ வினையறுக்கும் நாத கீதம்
நாளெல்லாம் நயப்பெறவே நவின்ற போதம்
பெம்மானைப் பிரார்த்திக்கப் பிறந்த வேதம்
பேகமற்றுச் சுவைப்பதற்கும் பேரார் சாதம்
இம்மானி லத்துமணி இதயகீதம்
இறவாத பேரின்பம் இயற்றும் காண்போம்!

காணரிய பரம்பொருளின் காப்புத் தன்மை
கண்டமணி வாசகரும் காதல் கொண்டே
வேணியனின் அருட்காட்சி விளக்கை யேற்றி
மெய்ஞ்ஞான சுடர்விரிந்த மேலா மன்பாற்
பேணியதோர் பெரும்பாவை பிறங்கச் செய்தார்
பேணுகிறோம் திருவெம்பாப் பெருநா ளன்றே
ஆணவ லத்திருளை அறவே நீக்கின்
அப்பாவை அகத்துளனே அறிகு வோமே!

அறியமுடி யாதவுயர் ஆதி யந்தம்
அற்றபரம் பொருளதனை அகத்துள் வைக்கப்
பொருமடிக்கும் போதமதைப் புகட்டிப் போந்தார்
பொழிளறிந்த மாணிக்க வாச கர்தாம்!
இறையடிக்கே இதமார்ந்த அடிமை யாக
இப்படிக்கண் வாசகத்தை இனிது ஓதி
நெறிவடிவ மாகிவிட்டால் மனிதன் தானே
நிமலனுக்குச் சமமாக நிறைகுவானே!

நிறைவுதரும் உறவுளனே நெஞ்சுள் வைத்து
நீதியெனும் நிறைகுறையா தென்றும் நின்றே
அறிவதுதான் ஆன்மிகத்தின் ஆதி யாகும்
அவ்வழிக்கண் காண்பதெல்லாம் சோதி யாமே!
பொறிவழிக்கண் மனமதனைப் போக விட்டுப்
புன்னிலைக்கண் தம்மையறி யாதார் தம்மை
இறைவிழித்தே பார்க்கின்றான்! என்றே ஓர்நாள்
என்வழிக்கே தன்விழியை இணைப்பா ரென்றே!

என்றுமுயர் விழிப்பார்ந்த இறையைக் கூவி
எம்பெருமான் பள்ளியெழுந் தருள்வா யென்றே
நன்றுவப்பார் பாவைதனை நாடு முன்னம்
நலமணி வாசகரும் நயந்தார் பாடி
இன்றுமதை இசைக்கின்றோம் எழுச்சி கூட்டி
இவ்வெழுச்சி உறங்குகின்ற இதயம் தன்னை
நன்றுவிழிப் பாயிருக்க வேண்டு மென்றே
நாட்டியமெய்ஞ் ஞானமதைக் கொள்ளு வோமே!

## பதுளையில் இ. தொ. கா. மாநாடு

# சிவாஜி, ஜெமினி, கண்ணதாசனை அழைக்க ஏற்பாடு

(கொழும்பு)

எதிர்வரும் மார்ச் மாதம் நடைபெறவுள்ள இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் 26வது வருடாந்த மாநாட்டுக்குத் தமிழகக் கலைஞர்களை அழைப்பதெனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

நடிகர் திலகம் சிவாஜி கணேசன், ஜெமினி கணேசன், தமிழக அரசின் ஆஸ்தானக் கவிஞர் கண்ணதாசன், சீர்காழி கோவிந்தராஜன், டி. எம். சௌந்தரராஜன், கே. பி. சுந்தராம்பாள் ஆகியோரை அழைப்பதென முடிவுசெய்யப்பட்டிருக்கிறது. இதற்கான ஒழுங்குகளை இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் பொதுச் செயலாளர் திரு எம். எஸ். செல்லச்சாமி, முன்னாள் செனட்டர் ஆர். ஜேசுதாஸன் ஆகியோர் மேற்கொண்டு வருகின்றனர்.

மார்ச் மாதம் 11, 12, 13ம் திகதிகளில் மேற்படி மாநாடு பதுளையில் நடைபெறவிருக்கிறது. இந்த மாநாட்டையொட்டி நடைபெறும் கலை நிகழ்ச்சிகளில் தமிழகக் கலைஞர்கள் கலந்துகொள்வர் எனத் தெரிவிக்கப்பட்டது. [உ]



## மாலைதீவில் இலங்கைத் தூதரகம்

[கொழும்பு]

மாலைதீவில் இலங்கை தூதரகம் ஒன்றை அமைக்கவிருக்கிறது.

தற்போது இலங்கைக்கு விஜயம் செய்துள்ள மாலைதீவு வெளிநாட்டமைச்சர் ஜனாப் ஜமீலிடம் இலங்கை வெளிநாட்டமைச்சர் ஜனாப் ஏ. ஸீ. எஸ். ஹமீத் இதனைத் தெரிவித்தார்.

மாலைதீவுடன் ராஜதந்திரத் தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்வதென்ற இலங்கைஅரசின் திட்டத்தை அவரிடம் தெரிவித்த ஜனாப் ஹமீத் ஜனாதிபதி திரு ஜே. ஆர். ஜெயவர்த்தன மாலைதீவுடன் நெருங்கிய உறவுகளை ஏற்படுத்திக் கொள்ள விரும்புகிறாரென்றும் தெரிவித்தார்.

ஜனாப் ஜமீல வர்த்தக அமைச்சர் திரு. லலித் அத்துலத் முதலியும் சந்தித்தார்.

இரு தரப்பிலும் வர்த்தக உறவுகளை ஏற்படுத்திக்கொள்வது பற்றி இவர்கள் ஆராய்ந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

## வெள்ள நிவாரணம்:

# தமிழகத்திற்கு மத்தியஅரசு ரூ. 10 கோடி வழங்கியது

சென்னை, ஜன. 11

சமீபத்தில் தமிழகத்தில் ஏற்பட்ட சூறுவளி, புயல் நிவாரணத்திற்கு மத்திய அரசு 10 கோடி ரூபா வழங்கியுள்ளது.

இத்தொகையில் 4 கோடி ரூபா நீலகிரி மாவட்டத்திற்கு ஒதுக்கப்படுமென்று நீலகிரி மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. தர்மராஜன் நிருபர்களிடம் தெரிவித்தார். [உ]

# "முக்கிய நதிகள் நாட்டுடைமையாகவேண்டும்"

## தமிழக அமைச்சர் யோசனை

சென்னை, ஜன 11

நீர்ப்பங்கீடு தொடர்பான பிரச்னைகள மாநிலங்களுக்கு இடையில் உருவாவதைத் தவிர்க்கவும். இதுவிடயத்தில் அரசியல் கண்ணோட்டத்தை நீக்கவும் முக்கிய நதிகளை நாட்டுடைமையாக்கவேண்டும்

இவ்வாறு தமிழ்நாடு மின்சாரத்துறை அமைச்சர் திரு எஸ் இராமச்சந்திரன் ஆலோசனை கூறியுள்ளார்,

சென்னையில் நடைபெற்ற வைபவம் ஒன்றில் பேசிய அவர் நீர்வளங்களைத் திறம்பட நிர்வகிப்பதற்கும் இது பயன்படும் என்றும சொன்னார்.

இந்தவகையில் தொழில் நுட்ப ஆணைக்குழு ஒன்றும் அமைக்கப்படவேண்டும் என யோசனை தெரிவித்தார். [உ]

# "சைவர்களாகப் பிறந்தது பெரும் பாக்கியமாகும்"

(யாழ்ப்பாணம்)

"அறவாழ்வு வாழ மரண பயமே மக்களை வழி நடத்தும் நாம் இம்மையிலேயே மோட்சத்தை அடையக்கூடிய முறையில் நடக்கவேண்டும். எமக்கு இப்பிறவி கிடைத்ததும் சைவர்களாக நாம் பிறந்ததுமே பெரும் பாக்கியமாகும் "

சாவகச்சேரி வேதவன விநாயகர் ஆலய மண்டபத்தில் நடைபெற்ற தென்மராட்சி சைவ மகாசபைக் கூட்டத்தில் உரையாற்றிய சித்தாந்த சமய வித்தகி திருமதி சிவ. உடையம்மா மேற்கண்டவாறு கூறினார்.

சபைத் தலைவர் சங்கீதபூஷணம் திரு. சி. விஜிசித்தம்பி தலைமை வகித்தார். உபதலைவர் ஆசிரியமணி இ. த. சுப்பிரமணியம் கூறியதாவது:

கடவுட்பக்திக்கு முதலிடமளித்த வடபகுதி மக்கள் பொருட்செல்வத்தை நோக்கி நகரத்தலைப்பட்டுள்ளனர். கடவுள் உணர்வு குறைய வன்செயல்கள் தலை எடுக்கும். இது எமது நாயன்மார் கண்ட அறவாழ்வுக்கு முரண். ஆகவே வையகத்தின் முறைப்படி இருந்த சமய நூல்களைப் படிப்பதுடன் நல்லொழுக்கத்தை கடைப்பிடிக்கவேண்டும்.

வித்துவான் வே. நடராசா, திரு. வ சின்னத்துரை, தருமகர்த்தா வா. கதிரேசபிள்ளை ஆகியோரும் உரை நிகழ்த்தினார்கள். (க)

# வேலை நிறுத்தத் தொழிலாளருக்கு கசையடி, சிறை

## பாக். இராணுவஅரசு தண்டனை

லாகூர், ஜன 11

சட்டவிரோதமாக வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டதாகக் குற்றஞ் சாட்டப்பட்ட 13 தொழிலாளர்களுக்கு பாகிஸ்தான் இராணுவ அரசு கசையடியும், சிறைத்தண்டனையும் விதித்துத் தீர்ப்பளித்தது.

பத்துமுதல் பதினைந்து கசையடிகளும் ஆறுமாதங்கள் முதல் ஒருவருடம் வரை சிறைத்தண்டனையும் இவர்களுக்கு விதிக்கப்பட்டது [உ]

# "கிறிஸ்தவ சபை வளர்ச்சி: மாதர்பங்கு மகத்தானது"

[அரியாலை]

"கிறிஸ்தவசபைகளின் வளர்ச்சியில் பெண்களின் பங்கு முக்கியமாக அமைகிறது. கிறிஸ்துவை சிலுவையில் அறைந்து கொல்ல கூட்டிச் சென்றபோது அவரோடிருந்த சிஷ்யர்கள் பயந்து ஒடிவிட்டனர், பெண்களே அவரைத் தொடர்ந்து அழுதுகொண்டு சென்றதாக வேதம் கூறுகிறது"

இவ்வாறு தென்னிந்திய திருச்சபையின் சாவகச்சேரி தேவாலயத்தில் நடைபெற்ற திருமதி கனகம் சுப்பிரமணியத்தின் சேம இறுதி ஆராதனையில் உரையாற்றிய யாழ் திருமண்டலத்தின் இளைப்பாறிய பேராயர் குலேந்திரன் அடிகள் கூறினர். அவர் மேலும் கூறியதாவது:

அருட்திரு சுப்பிரமணியம் அடிகளின் பாரியாராக அமைந்த திருமதி கனகம் அவர்கள சபைகளின் வேலைகளில் கணவனோடு சேர்ந்து உழைத்ததுடன் நல்ல பண்புள்ளதாயாராகவும், நல்ல விசுவாசமும், தன்னடக்கமும், எந்தநேரமும் மகிழ்ச்சியும், பிறர்சிநேகம் கொண்டவராகவும் தனது இறுதிக்காலம்வரை வாழ்ந்து வந்தார் என்றார்,

யாழ் திருமண்டலத்தின் பேராயர் அருட்பெருந்திரு. டி. யே அம்பலவாணர் அடி

[5ம் பக்கம் பார்க்க]

## ஸ்ரீ லங்காவில் விஜயா

(வெள்ளவத்தை)

"பைலட் பிரேம்நாத்" கூட்டுத்தயாரிப்பை உருவாக்கிய இலங்கைத் தயாரிப்பாளர் திரு எம். டி. சந்திரசேனா மீண்டும் இலங்கை இந்திய கூட்டுத்தயாரிப்பு ஒன்றை உருவாக்க ஒப்பந்தம் செய்துள்ளார். இது முதன்முதல் உருவாகும் ஹிந்திப் படமாகும்.

'ஸ்ரீலங்காவில்விஜயா' என்ற பெயரில் உருவாகும் இந்த ஹிந்திப்படத்திற்கான கதையைப் பிரபல டைரக்டர் அமர்நாத் ஜயத்திலகா எழுதியுள்ளார். புகழ்பெற்ற ஹிந்தி திரைப்பட நட்சத்திரங்கள் நடிக்கும் மேற்படி திரைப்படம் சிங்களத்தில் மொழிமாற்றம் செய்யப்படும்.

## இன்றைய இராசிப்பலன்

மார்கழி மாதம் 28-ந் திகதி வெள்ளிக்கிழமை (12-1-79)

**மேடம்:-** புதிய வழிகள் மூலம் பொருள்வரவுக்கு இடமுண்டு, குடும்பத்தில் இனிமை தவழும், பிள்ளையொன்றின் உடல் நலமும் பாதிக்கப்படலாம்.

**இடபம்:-** தானிய நஷ்டத்திற்கு இடமுண்டு. பொருள் விரயத்திற்கும் இடமேற்படலாம், துன்பத்தின் ரேகைகள் படரும.

**மிதுனம்:-** வாழ்க்கையில் சோர்வுக்கும் இடமுண்டு. குடும்பத்திலும் பிரச்னைகள் தோன்றிமறையும், பெரியவர்களுடன் பேச்சுவார்த்தைகளைக் குறைத்துக்கொள்ளவும்.

**கடகம்:-** நலன்தரும் சம்பவங்கள் இடம்பெறும, நுட்பமான வேலைகளில் ஈடுபடுவோர் போற்றப்படுவர், அரசியல்வாதிகளுக்கு ஆதரவு கிடைக்கும்.

**சிங்கம்:-** உணர்ச்சிவசப்படாதிருக்கவும், தவறான வழியின் மூலம் செலவுகள் அதிகரிக்கலாம, குடும்பத்தில் ஏற்படும் மோதல்கள் விரக்தி மனப்பான்மையை உருவாக்கும்.

**கன்னி:-** வாகனச்சாரதிகள் பயனடைவர். தாய்வழி ஆதரவும் அவசியம் கிட்டும், விளைபொருள் விருத்தியுடன் விருந்துக்கும் இடமேற்படும்.

**துலாம்:-** புதிய நண்பர்களின் அறிமுகம இன்று கிடைக்கும், புத்திரசுகத்திற்கும் இடமுண்டு, மணவாழ்வில் மகிழ்ச்சி தென்படும்.

**விருச்சிகம்-** வேதாந்த சிந்தனைகள் தலைதூக்கும், உங்கள் முன்னேற்றத்தைத் தடுப்பதற்கு எதிரிகள் முனைவர், கொடுக்கல் வாங்கல் மூலம் பிணக்குகள் தோன்றி மறையும்.

**தனுசு:-** வாழ்க்கையில் தென்றல் வீசும், பிள்ளைகளினால கண்ணியம் கிடைக்கும். கடமையில் முன்னேற்றம்தென்படும, சாஸ்திரவழிச் சுகத்திற்கும் இடமுண்டு.

**மகரம்:-** அன்னியர் சகவாசம் உங்களை ஆபத்தில் மாட்டிவைக்கும், உங்கள் வீட்டிலேயே பூசல்கள்தோன்றிமறையும், அக்கினியாயதபீடைக்கும் இடமேற்படும், பொறுமை நன்று.

**கும்பம்:-** பிதாவழி வரவுக்கும் இடமுண்டு, புண்ணிய விருப்பும மேலிடும, கல்வியிலும் முன்னேற்றமுண்டு. பொன்னுள்.

**மீனம்:-** உற்சாகமாக நாளை ஆரம்பிப்பீர்கள், சிலருக்கு மகிழ்ச்சிகரமான இடமாற்றமும் ஏற்படும், வெளியிடத்திலிருந்து வரவேற்கவேண்டிய செய்தியும் கிடைக்கும்.

சோதிடசாத்திரி

திருமலை க. வேலுப்பிள்ளை

## புதிய தொலைபேசி இணைப்பு

[யாழ்ப்பாணம்]

வண்ணார்பண்ணை வட்மேற்கு பிடாரி கோவிலடி உபதபால் நிலயத்தின் புதிய தொலைபேசி இணைப்பை நல்லூர் எம். பி. திரு. எம். சிவசிதம்பரம் ஆரம்பித்து வைத்தார்.

வடமாநில அத்தியட்சகர் திரு. எஸ். பாலசிங்கம். மாவட்டத்தந்திப் பொறியியலாளர் திரு. தேவசிகாமணி ஆகியோரும் இவ்வைபவத்தில் சமூகமளித்திருந்தனர். [உ]


# வைத்திலிங்கம்ஸ்

0 உறுதியானதும்
0 நீடித்து உழைப்பதும்
0 தன்னிகரற்றதுமான

'றிவர்' பிரான்ட்

கல்வனைஸ்ட் இரும்புத் தகடுகள்

பிரதான விநியோகஸ்தர்களும் இரும்புப் பொருட்கள் விற்பனையாளர்களும்

என். வைத்திலிங்கம் நிறுவனத்தார்

450, பழைய சோனக தெரு,
கொழும்பு--12
தொலைபேசி: 33143-4

கிளை: 138, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 530

# "நாடு பிளவுபடுவதை சிங்கள மக்கள் உணர்ந்து வருகிறார்கள்"

## அஞ்சலிக் கூட்டத்தில் பண்டிதர்

[யாழ்ப்பாணம்]

''பயங்கரவாதத்தை பயங்கர வாதத்தினால்தான் அடக்கலாம் என்று அமைச்சர் ஒருவர் கூறியுள்ளார். தமிழர் மீது பெரும் ஆயுதத்தாக்குதல் ஒன்றை நடத்த திட்டமிட்டு வருகின்றார்கள். நாடு பிரியப் போகிறது என்பதை சிங்கள மக்கள் உணர்ந்து வருகின்றார்கள்.''

தமிழாராய்ச்சி மாநாட்டில் உயிர்நீத்தவர்களின் அஞ்சலிக் கூட்டத்திற்கு தலைமை தாங்கிப் பேசிய ஊர்காவற்றுறை எம். பி பண்டிதர் க. பொ. இரத்தினம் மேற்கண்டவாறு கூறினார்.

பண்டிதர் க. பொ. இரத்தினம் மேலும் கூறியதாவது! ''தமிழ் ஈழம் அமைக்கப்பட்ட பின் முதல் வேலையாக இங்கு ஞாபகார்த்த மண்டபம் அமைக்கப்பட்டு, அந்த மண்டபத்தில் தான் முதல் தமிழ் ஈழக்கொடி பறக்கவிடப்படும். பொலிஸாரின், இராணுவத்தினரின் அட்டூழியத்தை தாங்க முடியாமல்தான், தமிழ் மக்கள் மத்தியில் சுதந்திர தாகம். விடுதலை உணர்வு ஏற்பட்டது,

''மக்கள் சமாதானமாக வாழவேண்டுமானால் தனித் தமிழ் நாடு வழங்கப்பட வேண்டும் எனப்பல சிங்களத் தலைவர்களிடம் நான் எடுத்துக் கூறியுள்ளேன். பொலிசாரின் அட்டூழியத்தினால்தான் சிவகுமாரன் போன்ற வீர இளைஞர்கள் தங்கள் உயிர்களை தியாகம்செய்ய முன் வந்தார்கள்.

''தென்னிலங்கைத் தமிழர்கள் ஈழத்தை ஆதரிக்கவில்லை யென சிங்களத் தலைவர்கள் கூறிவந்தார்கள். ஜேயல் கல்லூரி தமிழ் மாணவர்களின் விடுதலை உணர்ச்சியை அறிந்த பின்தான் தென்னிலங்கை தமிழர்களும் தமிழ் ஈழத்தை ஆதரிக்கிறார்கள் எனச் சிங்களத்தலைவர்கள் இன்று அறிந்து கொண்டார்கள்.

''தமிழ் மக்கள் பொலிஸ் நிலையத்திற்கு எதற்கென்றாலும் போக முடியாத சூழ்நிலை உருவாகிக்கொண்டு வருகிறது. மாவட்ட மந்திரிப் பதவிகளால் எங்களை விலைக்கு வாங்கலாம் என அரசு கனவு காண்கிறது. எந்தப் பதவியும் தந்து எம்மை விலைக்கு வாங்க முடியாது, எதற்கும் நாம் அடிமையாக மாட்டோம்.

''இந்நாட்டில் கடைசித் தமிழன் இருக்கும் வரை தமிழ் ஈழத்திற்காகப் போராடுவான். தமிழ் ஈழக் கொள்கையை விட்டு ஓர் அங்குலம்கூட நாம் பின்வாங்கத் தயாராக இல்லை எதிர்காலத் சந்ததியினரும் அக்கொள்கையை பின்பற்றியே நடப்பார்கள்.''

### தமிழர் வரலாறு

வணபிதா சிங்கராசா பேசுகையில் கூறியதாவது:- 'தமிழர்களின் வரலாற்றை புரட்டிப்பார்க்கும்போது அழிவுகளைக் காண்கின்றோம். அழிவுக்குப்பின் தான் ஆக்கம் ஏற்படுவதை உலக வரலாற்றில் கண்டிருக்கிறோம். இஸ்ரேலில் எத்தனையோ அழிவுக்குப் பின்னர் ஆக்கம் ஏற்பட்டுள்ளது. தமிழன் வரலாற்றையிட்டு பெருமை பேசிவருகிறான் பெருமை பேசுவதில் பயனில்லை நம்பிக்கையிருக்க வேண்டும் அதன் மூலம் நமது விடுதலையைப் பெறமுடியும்.

''அடக்குமுறையினால், சுதந்திர தாகத்தை எந்த ஆட்சியாளராலும் அடக்கிவிடமுடியாது அடக்குமுறை அட்டூழியம், அதிகரித்தால் தான் விரைவில் தமிழ் ஈழம் மலரும்.

''சிங்களக் குடியேற்றத்தை எவ்விதத்திலும் நாம் தடுத்து நிறுத்த முடியும். எல்லையில் தமிழர்கள் பல தொல்லைக்கு ஆளாகியிருக்கிறார்கள்.

''செட்டிகுளம், நெடுங்கேணி, கொக்கிளாய், வவுனியா பகுதிகளில் தினமும் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றம் நடைபெற்றுவருகிறது. இதனை எதிர்க்காமல் பார்த்துக் கொண்டிருந்தால் தமது நிலம் பறிபோவது தான் மிச்சமாகும். ஆயுதப் படைகளைகுவிக்கிறார்கள். அதுவும் எமக்கு ஆபத்துத்தான்.

''பதவிகள், சலுகைகள், உதவிகளை உதறித் தள்ளுங்கள். வேலைவங்கிப் படிவங்கள் நமக்கு விமோசனமளிக்காது. கூட்டம் கூட்டமாக வந்து எல்லையில் குடியேறுங்கள்.

''ஆவரங்கால் மாநாட்டில் அழகான தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்பட்டது. இன்று வரை அது நிறைவேற்றப்படவில்லை. வாலிபர்கள் எல்லைகளைக் காப்பாற்ற முன்வர வேண்டும். உத்தியோகத்தை உதறித்தள்ளிவிட்டு வாருங்கள்.

''அகதிகளைக் கொண்டுவந்து எல்லைகளில் குடியேற்றுவது அபாயம். மீண்டும் அவர்கள் இங்கு அகதிகளாகத்தான் வருவார்கள். யாழ் குடா நாட்டை விட்டு வாலிபர்கள் புறப்பட தயங்குவதேன்? அப்படியானால் எல்லைகளை எப்படிக் காப்பாற்ற முடியும்.

ஜனாப்முகைதீன் பிச்சை பேசுகையில் கூறியதாவது:-

''கவிஞர் இக்பால், பாகிஸ்தானின் சுதந்திரத்திற்காக பாடியபோது மக்கள் ஏளனம் செய்தனர். அன்றுபாகிஸ்தான் என்ற நாமமே இல்லை இன்று பாகிஸ்தான் ஒரு தனிநாடு. கவிக்குயில் பாம்தியார் இந்தியாவின் சுதந்திரத்திற்காகப்

(6ம் பக்கம் பார்க்க)

---

## பக்திஇலக்கிய...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

ரால் தமிழ் மொழியின் கவிதை வளம் பலவற்றாலும் வளர்ந்து செழித்துச் சிறந்தோங்கியது என்று கூறலாம். எனவே சங்க காலத்திற்குப் பின்பு இற்றைக்கு 1300 ஆண்டுகட்கு முன்னர் புதியதொரு கவிதை இலக்கிய மறுமலர்ச்சிக்கு வித்திட்டு வளர்த்த பெருமை ஞானசம்பந்தப் பெருமானுக்கே சிறப்பாக உரியது எனலாம். இது கருதியே அருணகிரியாரும் தமது திருப்புகழின் ஓரிடத்தில் புவியதனிற்ப்ரபுவானபுகலியில் வித்தகர் போல, அமிர்த கவித்தொடை பாட அடிமை தனக் அருள்வாயே' எனக் கூறியிருத்தலும் நோக்கற்பாலதாகும்.

ஞான சம்பந்தர் தமிழ்க் கவிதைகளில் தமக்குமுன்னும் பின்னும் இல்லாத முறைகளில் நிகழ்த்திக் காட்டிய அற்புதங்களும், அருமைப்பாடுகளும் மிகப் பலவாகும் சங்ககால கவிதைகளின் அமைப்பிற்கு அறவே புதியனவாகிய பலதிறக் கவிதைகளை முதன்முதல் பாடிக்காட்டி வழிவகுத்தவர் சம்பந்தப்பிள்ளையாரே. பலவகை விருத்தப் பாடல்களை மட்டுமேயன்றித் திருவிராகம், வழிமொழித் திருவிராகம், திருவிருக்குக் குறல், மொழிமாற்று, மாலைமாற்று, திருத்தாளச்சதி யாழ்மூரி, ஏகபாதம், திருவெழுகூற்றிருக்கை, சக்கர மாற்று, கோமூத்திரி, இயமகம், கூடசதுக்கம் என்பன போன்றும் பல திற அமைப்புள்ள வியத்தகு தமிழ்ப் பாடல்களை அருளிச் செய்தவர் ஞானசம்பந்தப் பெருந்தகையாளரேயாகும்.

மேலும் எல்லாம் வல்ல இறைவனாகிய சிவன் எங்கே இருக்கின்றான் என்பதையும் எமக்கு அறிவிக்கின்றார் சம்பந்தப் பெருமான் தமிழின் நீர்மை பேசப்படும் இடங்களும், இன்னிசையுடன் தமிழிசைப் பாடல்கள் பாடப் பெறும் இடங்களுமே அதுவாகும் என்பதை பின்வரும் பாடல்மூலம் அறிவிக்கிறார்.

தமிழின் நீர்மை பேசித்
தாளம் வீணை பண்ணி நல்ல
முழவிம் மொந்தை மல்கு
பாடல்
செய்கை இடம் ஓவார்
குழலின் மேனியது தந்த
கோலநீர்மைபதுகொண்டார்
கமழும் சோலைக் கானூர் மேய
பவள வண்ணரே.

தமிழின்பால் அவருக்கிருந்த எல்லையற்ற அன்பு என்னே! 'யாமறிந்த மொழிகளிலே' எனப் பாரதியாரும் 'தமிழன் என்றோர் இனமுண்டு" என்று நாமக்கல் கவிஞரும், 'தமிழுக்கு அமுதென்று பேர் இன்பத் தமிழ் எங்கள் உயிருக்கு நேர்" என அண்மைக் காலத்தே பாடிய பாரதிதாசன் அவர்களும் அழகுறப் பாடிப் பரவிய தமிழ் உணர்ச்சியை இற்றைக்கு ஆயிரத்து முந்நூறு ஆண்டுகளுக்கு முன்னரேஎழுப்பிப்பரப்பி வளர்த்த திருஞானசம்பந்தப்பிள்ளையாரின் நற்றமிழ்ப்பற்றினை சைவஉலகம் உள்ள வரை என்றும் மறக்காது என்பது வெளிப்படை. [வளரும்]

---

## கிறிஸ்தவ...

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

கள் சேமஆராதனையை நடாத்தி இறுதி ஆசிர்வாதத்தை வழங்கினார்.

காலம்சென்ற திருமதி கனகம் சுப்பிரமணியத்திற்கு தமது இறுதிமரியாதையைச் செலுத்துவதற்கு சாவகச்சேரித் தொகுதிப் பாராளுமன்ற உறுப்பினர் திரு வி. என் நவரத்தினமும், சாவகச்சேரி நீதிபதியும், சட்டத்தரணிகளும், யாழ் திருமண்டலக் குருமாரும் வந்திருந்தனர். (உ)

---

## ஜுப்பிட்டர்ஸ் சுழல்கேடய உதைபந்தாட்டசுற்றுப்போட்டி

(யாழ். விளையாட்டு நிருபர்)

பாஷையூர் சென். அன்ரனிஸ் விளையாட்டுக் கழகத்தின் ஆதரவுடன்ஜுப்பிடர்ஸ்விளையாட்டுக்கழகம் நடாத்திய உதைபந்தாட்டப் போட்டி முடிவுகள் பின்வருமாறு:

ஜிங் ஜாங் பிங் 3-1 கோல்களால் செவன் டைமன் கோஷ்டியை வென்றது ஜெகன் கோஷ்டியை 3-0 கோல்களால்ஜேம்ஸ் பொன்ட் கோஷ்டி வெற்றியீட்டியது: ராஜா கோஷ்டி 2-1 கோல்களால் கெரலாஸ் கோஷ்டியை வென்றது. புலட்ஸ் கோஷ்டி 1-0 கோலால் சென் யூட்ஸ் கோஷ்டியை வென்றது. இறுதிப் போட்டியில் ஜிங் ஜாங் பிங் கோஷ்டி ராஜா கோஷ்டியை 2-1 கோலால் வெற்றியீட்டி ஜுப்பிடர்ஸ் கழக சுழல் கேடயத்தைத் தனதாக்கிக்கொண்டது.

ஒரே நாளில் நடத்தி முடிக்கப்பட்ட இப்போட்டிகளுக்கு பிரதம விருந்தினர்களாக வண. ரி. எம். இராசநாயகம், திரு. நீ. எம். அன்ரனிப்பிள்ளை, திரு. திருமதி. பற்றிக்கோன் ஆகியோரும் கலந்துகொண்டனர் திருமதி பற்றிக்கோன் வெற்றியீட்டிய கோஷ்டிகளுக்குப் பரிசில்களை வழங்கினர்.

இப்போட்டிகளில் இலங்கை உதைபந்தாட்ட வீரர்களான திரு எம் பிரான்சிஸ், எஸ். கிளிபேட், எம் சில்வேஸ்ரர் ஆகிய வீரர்களும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

போட்டிகளுக்கு நடுவர்களாக திரு ரீ மரியநாயகம், எஸ். அந்தோனிப்பிள்ளை, எஸ். கொன்சாலஸ், ஏ. சொய்சா ஆகியோர் கடமையாற்றினார்கள். (இ)

---


நாகம்ஸ் (சுன்னாகம்)
தினசரி 6-45, 10-00
சனி, ஞாயிறு 1-45
சிவராம் - சந்திரகலா
அநுராகம்

வெஸ்லி (மானிப்பாய்)
தினசரி 6-30, 9-30
கமலஹாசன் - ஜெய்சித்ரா
சத்யம்

பொங்கல் வெளியீடு!
Rio (Jaffna) From 13-1-79 Daily 4 Shows Phone: 7607
POLICE PHYTHON 357
அவளோ ஏமாற்றுக்காரி!
அவனோ சுறுசுறுப்பான உளவாளி!!
ஆனால், அவனால்.........?

13-1-79 முதல்
மனோகரா (யாழ்நகர்) தினசரி 4 காட்சிகள்
ரஜனிகாந்த்—ஸ்ரீதேவி
கமலஹாசன்—வை. விஜயா
மூன்று முடிச்சு

சாந்தி (யாழ்நகர்) போன்: 7612
தினசரி 10-30, 2-30, 6-30, 9-45
Malini Fonseka 'VEERAPURAN APPU'
மாலினி பொன்சேகா வீரபுரன் அப்பு (சிங்களம்)
14-1-79 பொங்கல் முதல்
"வீரத்திருமகன்"

ராஜா (யாழ்நகர்) 13-1-79 முதல் பொங்கல் வெளியீடு
விஜயகுமார், ஜெயசித்திரா. நாகேஷ், சுந்தரராஜன் நடித்த
பயணம்

REGAL (Jaffna) NOW SHOWING
Daily at, 4-30, 7-00 & 9-30 p.m.
GREGORY PECK in
DUEL IN THE SUN
(Cowboy) Color

வெலிங்டன் (யாழ்ப்பாணம்) தினசரி 4 காட்சிகள்
ஜெமினி - சுஜாதா - கமலஹாசன் - சுமித்ரா
லலிதா

லிடோ (யாழ். நகர்)
விஜயகுமார் - ஸ்ரீவித்யா - தங்கவேலு
ஆசை அறுபதுநாள்

4-வது ஜனத்திரள் வாரம்
வின்ஸர் (யாழ்ப்பாணம்) போன்: 466
தினசரி 4 காட்சிகள்
பைலட் பிரேம்நாத்
(ஈஸ்ட்மன் கலர்)


போயா தினத்தையொட்டி இன்று சினிமா காட்சிஇல்லை

## உடுவில் கொலைவழக்கு:

# 'மேடர் நடந்துபோச்சு என இன்ஸ்பெக்டரிடம் கூறினேன்'

(யாழ்ப்பாணம்)
நான் பொலிஸ் நிலையம் சென்றபோது இன்ஸ்பெக்டரிடம் 'மேடர்' நடந்துபோச்சு என்றேன். பின்என்னுடன் வந்த இரு பொலிஸாரில் ஒருவரிடம் அருளம்மா இறந்துவிட்டா என்று சொன்னேன்.

உடுவில் கொலைவழக்கில் சாட்சியமளித்த பொன்னுத்துரை மேற்கண்டவாறு கூறினார்.

இவ்வழக்கு யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றத்தில் நீதிபதி ஜனாப் எம். ஜமீல் முன்னிலையில் நடைபெற்றது.

இவ்வழக்கில் உடுவிலில் 77 ஜூலை 20ம் தேதி மாணிக்கம் வனரத்தினம் அல்லது பூபாலு, ஆறுமுகம் கைலாசபிள்ளை அல்லது சின்னையா, ஆறுமுகம் வீரசிங்கம், கைலாசபிள்ளை செல்வராசா ஆகியோர் மரியதாஸ் அருளம்மாவை கொலை செய்ததாகவும் அதே நேரத்தில், அதே இடத்தில் சின்னப்பா இராஜேந்திரத்திற்கு காயம் விளைவித்ததாகவும் குற்றம்சாட்டப்பட்டுள்ளது.

எதிரிகள் சார்பில் சட்டத்தரணிகளான ஆர். ஈ. தம்பிரத்தினம், ஆர். ஜே செல்வரத்தினம், கே. குணரத்தினம், செல்வி ரூபா தம்பித்துரை ஆகியோர் ஆஜரானார்கள். அரச தரப்பில் சட்டத்தரணி தம்பித்துரை வழக்கை நடத்தினார்.

வழக்கு விசாரணை தமிழில் நடைபெற்றது.

சாட்சியமளித்த பொன்னுத்துரையை சட்டத்தரணி ஆர். ஈ. தம்பிரத்தினம் குறுக்குவிசாரணை செய்தார். அப்போது அவர் கூறியதாவது: கைலாசபிள்ளை வீரசிங்கம், செல்வராசா உட்பட எதிரிகள் கலகம் செய்துகொண்டிருந்ததை கண்டேன்,

''மரியாம்பிள்ளையை தாக்க முற்பட்டுக்கொண்டிருந்த எதிரிகள் பின் அவரை அடித்தார்கள். இதே நேரம் அருளம்மா குளறிக்கொண்டு ஓடிவந்தார். எதிரிகள் மரியாம்பிள்ளையை விட்டுவிட்டு அருளம்மா பக்கம் போனார்கள்.

பசுபதி மரியாம்பிள்ளை உருளுவதைக் கண்டேன். ராசேந்திரன் பிடித்துவிட்டார். அப்போது கைலாசம்பிள்ளை, செல்வராசா நிற்பதைக் கண்டேன். மரியாம்பிள்ளைக்கு வீரசிங்கமும், செல்வராசாவும் அடித்தார்கள்.

சட்: அப்போது என்ன நடந்தது?-அருளம்மா குளறிக்கொண்டு ஓடிவந்தார்.

சட்: அந்த நேரம் மரியாம்பிள்ளையை எதிரிகள் தாக்கினார்கள்?-ஆம்.

சட்: பசுபதி எதனால் தாக்கினார்?-கம்பியால்.

சட்: செல்வராசா?- தடியினால்.

சட்: வீரசிங்கம்?-தடியால்.

சட்: கைலாசபிள்ளை?- தடியால்.

சட்: நாலுபேரும் அடிக்க மரியாம்பிள்ளை கீழே கிடந்தார்?-கும்பலாக நின்று தாக்கினார்கள்.

சட்: மரியாம்பிள்ளைக்கு நியாயமான அடி விழுந்திருக்கும்?-இரண்டொரு அடிதான்

சட்: ராஜேந்திரத்தின் காயத்தைக் கண்டீர்?-ஆம்.

சட்: அப்படியானால் பலர் இரத்தக் காயத்துடன் நின்றதாகச் சொன்னீரே?-அதைத்தான் சொன்னேன்.

சட்: ஒருவரைத்தான் பலர் என்றீர்? ஆம்

சட்: பொலிசுக்குப் பலர் இரத்தக் காயத்துடன் நின்றதாகச் சொன்னீர்?-நான் சொல்லவில்லை.

சட்: சம்பவம் நடந்ததும் நீர் முதலில் பொலிசுக்குப் போனீர்?- மரியாம்பிள்ளையும், தில்லைநாயகமும் வந்தார்கள்.

சட்: இன்ஸ்பெக்டருக்கு என்ன சொன்னீர்?-மேடர் நடந்துபோச்சு என்று.

சட்: யார் செத்தது என்று சொன்னீரா?-இல்லை.

சட்: யார் மேடர் செய்தது என்று சொன்னீரா?-அவர் கேட்கவில்லை. அதனால் தான் சொல்லவில்லை.

சட்: சார்ஜன்ட் பொன்னம்பலம் வந்தாரா?-இல்லை. இரு பொலிசார் வந்தனர்?-ஒருவர் தமிழர். மற்றவர் சிங்களவர்.

விசாரணை 15ந் தேதி வரை பின்போடப்பட்டுள்ளது. [க]

### நாடு...

[5-ம் பக்கத் தொடர்ச்சி]

பாடினார். இன்று பாரதத் திறகு சுதந்திரம் கிடைத்தது அல்ஜிரியாவில் 12 லட்சம் மக்கள் போராடி தியாகம் செய்தனர். பல வருடம் போராட்டம் நீடித்தது. இன்று அல்ஜிரியா ஒரு தனி நாடு மனிதனுக்கு நம்பிக்கை இருக்கவேண்டும். தலைவர்கள் போராடி தனித் தமிழ்நாடு பெற்றுத் தருவார்கள். அவர்கள் மீது மக்கள் நம்பிக்கை வைக்கவேண்டும்.

### தியாகங்களை நினைவுகூருவோம்

திருமதி மங்கையற்கரசி அமிர்தலிங்கம் கூறியதாவது:

''அரசியல் போராட்டத்தில் உயிர்நீத்தவர்களுக்கு அஞ்சலிசெலுத்துகின்றோம் தமிழன் விழாவெடுப்பதை பொறுக்கமுடியாதவர்கள் அவன் பெருமையை கேட்க சகிக்கமுடியாதவர்கள் அப்பாவி உயிர்களைப் பலியெடுத்தார்கள். இதனால் அவனின் சுதந்திரதாகம் அடக்கப்படவில்லை. இந்தநாள் பல சம்பவங்கள் நினைவுக்கு வருகிறது. ஒவ்வொருமுறையும் தமிழன் அடிபட்டு உதைபட்டு அல்லல்பட்டிருக்கிறான். பழமையை எடுத்துப் பார்க்காவிட்டால் புதிய அமைப்பை ஏற்படுத்த முடியாது எமக்காக அவர்கள் செய்த தியாகங்களை நினைவுகூருகிறோம். நினைவுகூரவிட்டால், வருங்கால சந்ததியார் மறந்துவிடுவார்கள். கடந்தகால வரலாறுகளை நாம் பின்சந்ததியாருக்கு எடுத்துக்கூறவேண்டும். இத்தனை பெருமையுள்ளவன், தலைகுனிந்து வாழ்கின்றான் என்பதை அவர்கள் உணரவேண்டும்'' [கா]

சாவகச்சேரியில்

## ரூ. 60 ஆயிரம் செலவில் விளையாட்டு மைதானம்

(மட்டுவில்)
சாவகச்சேரி நகரில் ஒரு பொதுவிளையாட்டு மைதானத்தை அமைப்பதில் சாவகச்சேரி நகரசபை மிகவும் அக்கறை காட்டி வருவதாக நகரசபை விசேட ஆணையாளர் திரு. ரி நவரத்தினராஜா தெரிவித்தார்.

இந்த பொதுவிளையாட்டு மைதமானத்திற்காக சாவகச்சேரி சந்தைக்கு அருகாமையில் ஒரு காணியை விலைக்கு வாங்குவதற்கு ரூபா 60,000 ஒதுக்கியுள்ளதாக சாவகச்சேரி நகரசபை விசேட ஆணையாளர் மேலும் தெரிவித்தார். (உ)

### யாருடையது?

யாழ்ப்பாணம் கே. கே. எஸ். வீதியில் கண்டெடுக்கப்பட்ட திறப்புக் கோர்வை ஒன்று, யாழ்ப்பாணம் கே. கே. எஸ். வீதியைச் சேர்ந்த திரு. ஒஸ்டின் ரட்ணசிங்கம் என்பவரால் 'ஈழநாடு' காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் தகுந்த அத்தாட்சி காட்டிப் பெற்றுக் கொள்ளலாம்.

திருநெல்வேலியில்

### பொங்கல் விழா

(யாழ்ப்பாணம்)
திருநெல்வேலி கலாமன்றத்தினர், பொங்கலன்று பொங்கல் விழாவொன்றை நடாத்துகின்றனர். இவ்விழாவில் எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் தம்பதிகள் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொள்வார். நல்லூர் எம். பி திரு. எம். சிவசிதம்பரம் விழாவை ஆரம்பித்து வைப்பார்.

உள்ளூராட்சி மன்ற உதவி ஆணையாளர் திரு. அன்ரன் அல்பிரட் மற்றும் பிரமுகர்களும் கலந்துகொள்வர். டாக்டர் சண்முகதாஸ் தலைமையில் பட்டிமன்றமும் இடம்பெறும் மன்றத்தினரின் 'அவள் சென்ற பாதை' நாடகமும், கலைநிகழ்ச்சிகளும் இடம்பெறும்

### தீர்த்தோற்சவம்

(யாழ்ப்பாணம்)
காரைநகர் ஈழத்துச் சிதம்பரத்தில் தீர்த்தோற்சவம் இன்று நடைபெறும். இன்றைய விழாவில் டாக்டர் இ பாரதி, 'தில்லைவனத்துத் திருவூடல்' என்னும் இசைச் சித்திரச் சமய நிகழ்ச்சியை நடாத்துவார். [கெ]

### திருவாசக விழா

[நாயன்மார்கட்டு]
யாழ்ப்பாணம் நயன்மார் கட்டு ஸ்ரீ இராஜராஜேஸ்வரி அம்பாள ஆலயத்தில இன்று வெள்ளிக்கிழமை, சைவசமய அபிவிருத்திக் கழகத் தலைவர் வித்துவான் க. சொக்கலிங்கம் தலைமையில் திருவாசக விழா நடைபெறவிருக்கின்றது.

திருவெம்பாவை பத்து நாட்களும் க. இரகுநாதன் தலைமையில் சைவசமய அபிவிருத்திக் கழக இளைஞர்கள் வீதிதோறும் பஜனை பாடிச் செல்கின்றனர். இறுதி நாளன்று மாணிக்கவாசகரது திருவுருவப் படம் பஜனையோடு வீதிகள் தோறும் கொண்டு செல்லப்படவுள்ளது.

### திருவாதிரை விழா

(யாழ்ப்பாணம்)
யாழ். திருமுறை மன்றத்தின் திருவாதிரைவிழா இன்று அதிகாலை முதல் இரவு வரை நீராவியடி வீரகத்தி விநாயகர் ஆலயத்தில் சிறப்பாக நடைபெறும்.

மாலை நிகழ்ச்சிகள் மன்றத் தலைவர் திரு. க. சொக்கலிங்கம் தலைமையில் ஆரம்பமாகும். சேக்கிழார் மன்றத்தலைவர் சட்டத்தரணி திரு. த. சோமசுந்தரம் மங்கல விளக்கேற்றி வைப்பார். திரு மு. திருஞானசம்பந்தபிள்ளை, திரு. எம். இராமலிங்கம், சித்தாந்த பண்டிதர் திரு. என். கனகரட்னம் ஆகியோரின் சிறப்புரைகளும், திரு. எஸ். ஆர். திருஞானசம்பந்தனின் திருமுறைப் பண்ணிசைக் கச்சேரியும் நடைபெறும்.

### பௌர்ணமி கலைநிகழ்ச்சி

[யாழ்ப்பாணம்]
யாழ். மாநகராட்சி மன்றம் இன்று மாலை யாழ். திறந்த வெளியரங்கில் நடத்தும் பௌர்ணமி கலைநிகழ்ச்சிகளில் வி எஸ். செல்வராசாவின் இன்னிசைக்கச்சேரியும் யாழ். கலைவட்டம் அளிக்கும் வரணியூரானின் 'யார்அவன்' நகைச்சுவை நாடகமும், கோண்டாவில் வாகீஸ்வரி சன சமூக நிலையம் அளிக்கும் 'தியாகத்தீ' சமூக நாடகமும் நடைபெறும்.

### இன்று

(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாணம் வண்ணார் பண்ணை ஸ்ரீ விசுவலிங்க மகா கணபதி கோயில் (பன்றிக் கோட்டுப்பிள்ளையா கோயில்) திருவாதிரை விழாவும், திருவூஞ்சல் அரங்கேற்றமும், இன்று நடைபெறவுள்ளது.

### தேசிகரின் சமய விரிவுரைகள்

[யாழ்ப்பாணம்]
தமிழகப் பெரியார், வித்துவான் வி. சா. குருசாமிதேசிகர், இன்று மாலை புங்குடுதீவு மேற்கு, பெருங்காடுச் சிவன்கோவில், மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவில், இணுவில் பரராஜசேகரப்பிள்ளையார் கோவில், நீர்வேலிக் கந்தசுவாமி கோயில்களில் சமய விரிவுரை நிகழ்த்துவார். [கெ]

### ஜனாதிபதிக்கு...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தத்தில் தெரிவித்துள்ளதாகத் தெரியவருகிறது.

பழிவாங்கும் நோக்கத்துடனும் அரசியல் அடிப்படையுடனும் மிக விரைவிலேயே ஒரு இனக்கலவரத்தை அதுவும் வடபகுதியில் ஆரம்பிப்பதற்கான திட்டங்கள் தீட்டப்பட்டு அதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் இதை உடனடியாகத் தடுப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டுமென்றும் திரு. அமிர்தலிங்கம் தமது கடிதத்தில் ஜனாதிபதியைக் கேட்டிருப்பதாகத் தெரிகிறது.

### அலுவலகம்

(யாழ்ப்பாணம்)
காங்கேசன்துறையில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள பொலிஸ் அத்தியட்சகர் அலுவலகம், இன்று உத்தியோக பூர்வமாக ஆரம்பிக்கப்படும்.

யாழ்ப்பாணத்தின் இரண்டாவது பொலிஸ் அத்தியட்சகர் அலுவலகமான இதன் அத்தியட்சகராக திரு லயோ பெரேராவும் உதவி அத்தியட்சகராக திரு. றாடஸும் கடமையாற்றுவார்கள்.

திரு. றாயஸ் முன்னர் வல்வெட்டித்துறை பொலிஸ் நிலைய மொறுப்பதிகாரியாகக் கடமையாற்றியவர் என்பது குறிப்பிடத்தக்கது.

### துணைவி...

(1-ம் பக்கத் தொடர்ச்சி]

துள்ளார்.

துணைவியாக வந்த அந்தப் பெண் ஸ்ரூடியோவில் ஒரு புகைப்படம் பிடிக்கவிரும்பியதாகவும், வெறுங்கழுத்துடன் படம்பிடித்தால், அழகாக இருக்காதென்று கூறி தமக்குத் தாலிக்கொடியைத் தரும்படி கேட்டதாகவும் புகாரில் மேலும் கூறப்பட்டுள்ளது.

அப்பெண்ணில் நம்பிக்கையேற்பட்டதால் தாலி கோர்க்கப்பட்ட தங்கச் சங்கிலியை கொடுத்ததாகவும், தலையை வங்கியில நிற்குமாறும், படம்பிடித்தபின் திரும்பிவந்து தாலி கோர்த்து தருவதாகவும் கூறிப் பூநகரி சென்றதாகவும் புகாரில் மேலும் கூறப்பட்டுள்ளது.

நகையுடன் சென்றவர் பல மணி நேரமாகியும், திரும்பி வராததினால் சந்தேகங்கொண்டு, பட்டணம் போய் தேடி செய்திருட்பதாக உணர்ந்ததாகவும் ஜெஸிமா புகாரில் கூறியுள்ளார்.

ஜெஸிமா புகார்செய்ததைத் தொடர்ந்து பொலிஸார், குறிப்பிட்ட ஸ்ரூடியோவுக்குச் சென்றபோது, அங்கு சந்தேகப் பெண் படம்பிடித்தது தெரியவந்தது அந்தப் படம்பிடிக்கும் நிலையத்தில் அப்பெண் கொடுத்த விலாசத்தைப் பெற்றுப் பொலிஸார் துணைவிக்குச் சென்று அப்பெண்ணைக் கைதுசெய்தனர்.

பொலிஸார் விசாரணையை மேற்கொண்டபோது கணவனிடம் தாலிச்சங்கிலியைக் கொடுத்து விற்றுவிட்டு, அப்பணத்திற்குச் சாமான்கள் வாங்கிவிட்டார் என்பது தெரியவந்தது.

இதனைத் தொடர்ந்து கணவரான மார்க்கண்டு மகேந்திரத்துடன் (31 வயது) யாழ்ப்பாணத்திலுள்ள நகைக்கடைக்குச் சென்ற சமயம், தாலிச சங்கிலியை அங்கு உருக்கிக்கொண்டிருந்தனர் பொலிஸார் தாலிச் சங்கிலியை உருக்கிய நிலையில் நகைக்கடையிலிருந்து கைப்பற்றினர்.

சந்தேகநபர்கள் நேற்று யாழ் நீதவான் முன்னிலையில் ஆஜர்செய்யப்பட்டபோது, கணவன் மனைவி இருவரையும் நீதவான் தலா ஐயாயிரம் ரூபா சரீரப் பிணையில் செல்ல அனுமதித்து இம்மாதம் 22ம் திகதிக்கு விசாரணையை ஒத்திவைத்தார்.

### வார்ட்டில்......

[1ம்பக்கத் தொடர்ச்சி]

சிகிச்சைக்காக ஆஸ்பத்திரியில் அனுமதித்தாராம்.

வி விமாலினி என்ற இச்சிறுமி 6-ம் வாட்டிலிருந்து சிகிச்சை பெற்று வந்தார்.

இம்மாதம் 10-ம் திகதி பிற்பகல் 3-30 மணிக்கு, அந்த வாட்டில், சிறுமியை காணவில்லை என்பது தெரியவந்தது. இதனைத் தொடர்ந்து வாட்டில் பெரும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

உடனடியாக பொலிஸில் இதுபற்றி புகார் செய்யப்பட்டதை தொடர்ந்து புலன் விசாரணை நடைபெற்று வருகிறது.

கடந்த வருடமும் ஆஸ்பத்திரியில், சிகிச்சை பெற்று வந்த ஒரு குழந்தை காணமல் போனது குறிப்பிடத்தக்கது.


## விற்பனைக்கு

LAMBRETTA லம்பிறெற்ரு ஸ்கூட்டர்
இத்தாலியில் செய்தது- 150 CC. D. L. மொடல்
தொடர்பு கொள்க:

காந்தளகம்
213, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 256


இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி 63-ம் இலக்க அச்சகத்தில் 1979-ம் ஆண்டு தைமாதம் 12-ந்திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Registered as a Newspaper at the Geneial PostOffice
The Eelanaadu Post Bex No: 49, Telegram: Eelanaadu, Telephone: 389, Registered as a News paper in Sri Lanka.